பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை 03.05.2022 கதிர் 179

### இனி இது ரகசியம் அல்ல!

தேசிய ஒருமைப்பாட்டு அரசு அல்லது தேசிய இணக்க அரசு - இதுதான் இப்போது புதிதாக நிறுவப்பட எத்தனிக்கப்படும் அரசின் பெயராம்.

பெயர் எப்படி இருந்தாலும் வரப்போகின்ற உத்தேச அரசு நிச்சயமாக நாடாளு ☞ 2

# தேசிய ஒருமித்த அரசாங்கத்தை அமைக்க கோட்டா இணக்கமாம்

## இடைக்கால அரசுக்கு இப்படிப் பெயர்

கொழும்பு, மே 03

தேசிய ஒருமித்த அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் வெளியிட்டுள்ளார் எனத் தெரிவித்து நேற்று செய்திகள் வெளியாகியுள்ளன. ☞ 11

## காலிமுகத் திடலில் பதற்றம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து ராஜபக்ஷவினரும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் எனக் கோரி கொழும்பு, காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் எழுச்சிப் போராட்டம் நடைபெறும் ☞ 11

## நாணய நிதிய உதவியை இலங்கை பெற சீனா ஊக்கமளித்து ஒத்துழைப்புத் தரும்

### நிதியமைச்சர் அலி சப்ரியிடம் தூதுவர் உறுதியளிப்பு



இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் இலங்கையின் நிதி, நீதி அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

நிதியமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போது தேவையான ஒத்துழைப்புக்கள் மற்றும் இலங்கையின் ☞ 11

## இந்த அரசியல் சதுரங்க விளையாட்டில் இறுதி வெற்றி பொதுஜன பெரமுனவுக்கே

### உறுதிபடக் கூறுகின்றார் தினேஷ் குணவர்த்தன



பெரும்பான்மை உள்ளமையால் சதுரங்க விளையாட்டில் பெறும் வெற்றியைப் போன்று நாடாளுமன்றத்திலும் இறுதி வெற்றியை சிறீலங்கா பொதுஜன பெரமுனவே பெற்றுக் கொள்ளும் என சபை முதல்வரும் அமைச்சருமான ☞ 11

## பெற்றோல் பவுஸர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளமையால் இலங்கை பெற்றோலிய தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கத்தினரின் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் போது தங்கள் கட்டணத்தில் 40 வீதம் திருத்தம் செய்வதற்கு அவர் ☞ 2

# மஹிந்த ராஜினாமாவா? இல்லவே இல்லையாம்!

## இணைப்புச் செயலர் உறுதியான பதில்

கொழும்பு, மே 03

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அப்பதவியிலிருந்து தாமாக விலகுவார் என்ற பேச்சுக்கே இடமில்லை எனப் பிரதமர் தரப்பிலிருந்து மிகவ உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ☞ 11

## அரிசிக்கு மீண்டும் விலை நிர்ணயம்

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் வேளையில் மீண்டும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரிசி வகைகளுக்கான ☞ 2

## வெள்ளியன்று ஹர்த்தால்

எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது என தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பு ☞ 2

## அரசியல்வாதிகளைச் சந்திப்பதில்லை மல்வத்த பீடாதிபதி திட்டவட்ட முடிவு



எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல்வாதியும் தம்மைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் அதி.வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே சிறீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியி ☞ 2

## மஹிந்தர் துரத்தப்படப் போகின்றார் என்றதும் அரசிலிருந்து விலக அறிவித்தது இ.தொ.கா.!

### யாழில் நேற்று சுமந்திரன் சாட்டை

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், மே 03

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரை மஹிந்த ராஜபக்ஷ துரத்தப்படப் போகிறார் எனத் தெரியவந்த பின்னரே அரசாங்கத்தில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ☞ 11



## வீட்டில் சேமித்த பெற்றோலால் மாணவி உடல் கருகி உயிரிழப்பு

### பண்டத்தரிப்பில் நேற்று மாலை அனர்த்தம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே. 03

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பகுதியில் சுவாமிப் படத்திற்கு விளக்கேற்றிய தீக்குச்சை எறிந்தபோது அறையில் வைத்திருந்த பெற்றோல் மீது அது பட்டுத் திடீரெனத் தீப்பற்றியதில் 17 வயது மாணவி உடல் கருகி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வி பயிலும் சுதர்சன் சுதர்சிகா என்னும் 17 வயது மாணவியே ☞ 2

## அரசியல் தொலைநோக்கற்ற சுமந்திரனுக்கு இ.தொ.காவை விமர்சிக்கத் தகுதியேயில்லை

### செந்தில் தொண்டமான் யாழில் சீற்றம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு அரசியல் தொலைநோக்கு தெரியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ☞ 11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மன்றத்தின் ஒருமித்த கருத்து உடையதாகவும் இணக்கப்பாடு உடையதாகவும் இருக்கப்போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதியானது.

தேசிய இணக்கப்பாட்டு அரசு ஒன்றை உருவாக்குங்கள் என்று மகாநாயக்க தேரர்கள் உட்பட பல தரப்பினரும் முன்வைத்திருந்த யோசனைத் திட்டத்தை ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் ஒரேயடியாக நிராகரித்துவிட்டன.

அது குறித்து மற்றொரு பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு யாரும் பேச்சுக் கூட நடத்தவில்லை .

ஆக இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் வரை பொதுஜன பெரமுன என்ற மொட்டு கட்சியின் கூட்டில் பங்களித்த கட்சிகள்தான் இப்போது மீண்டும் புதிய பெயரில் ஓர் அரசு அமைக்கும் எத்தனத்தில் இப்படி நாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றன.

அரசில் இருந்து தூக்கி வீசப்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் சுசில் பிரேமஜயந்த, அத்தோடு இதுவரை காலமும் காத்திரமான அமைச்சர் பதவி கிட்டாமல் ஏமாற்றத்தோடு காத்திருந்த அனுர பிரியதர்ஷன யாப்பா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எந்தச் சமயத்திலும் அமைச்சர் பதவி இல்லாமல் இருக்க முடியாமல் தவிக்கும் நிமால் சிறிபால டி சில்வா போன்றவர்கள் எப்படியாவது தாங்கள் அமைச்சர்களாகி விட வேண்டும் என்பதற்காக நகர்த்தும் முயற்சிதான் இந்த தேசிய ஒருமித்த அரசு.

இந்த முயற்சிக்கு இணங்கிப் போகாவிட்டால் மகாநாயக்க தேரர்களின் சீற்றத்திற்கு ஆளாக நேரும் என்று கருதிய மொட்டுக் கட்சி நேற்று ஒரு தந்திரம் செய்தது.

இதுவரை காலமும் பொதுஜன பெரமுன அரசில் இருந்து விட்டு வெளியேறி, இப்போது தேசிய ஒருமைப்பாட்டு அரசு பற்றி பேசும் 11 கட்சி குழுவினர் உட்பட்ட 40 எம்.பிக்களின் பிரதிநிதிகளை பொதுஜன பெரமுன சார்பில் அதன் தவிசாளர் ஜி எல் பீரிஸ், தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, செயலாளர் சாகர காரியவசம் போன்றோர் நேற்று சந்தித்தனர்.

'சர்வகட்சி அரசு அமைக்க போகின்றீர்களா? நல்லது. நாங்களும் அதற்கு இணக்கம் தருகிறோம். ஆனால் எங்கள் தரப்பில் இருந்து – பொதுஜன பெரமுன தரப்பில் இருந்து – யாரும் பிரதமராக வரமாட்டார்கள்' என்று மொட்டு கட்சி அப்போது உறுதிபட தெரிவித்து விட்டது.

இந்த முடிவால் இரண்டு விடயங்கள். ஒன்று – இன்னும் பொதுஜன பெரமுனவில் உள்ள டலஸ் அழகப்பெருமவைப் பிரதமராக்கும் முடிவுக்கு ஆப்பு வைத்தாகிவிட்டது.

அவரை விட்டால் உங்களுக்குள் யார் பிரதமர் என்று சிண்டைப் பிடித்து, சண்டை போட்டு, முடிவு எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று அனுப்பிவிட்டது பொதுஜன பெரமுன.

மொட்டுக் கட்சியில் இல்லாத வேறு பிரதமர் ஒருவரை தேசிய அரசின் பெயரில் தேர்வு செய்து கொண்டு வருவது சுயாதீன குழுவினருக்கு பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பது நிச்சயம்.

இதற்கிடையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாமாகப் பதவி விலகுவது இல்லை என்பதில் மிக உறுதியாக இருப்பதனால், ஜனாதிபதியின் பாடு மேலும் சிக்கலாகி வருகிறது. வெளிப்படைக்கு ஜனாதிபதியும் பிரதமரும் அன்னியோன்னியமாக – அண்ணன் தம்பியாக – இருந்தாலும் அரசியல்வாதிகளாக இருவருக்குமிடையில் பெரும் கயிறிழுப்பு சத்தம் சந்தடி இன்றி நடந்து வருவதாக உள்வீட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐம்பது வருடங்களுக்கு மேல் அரசியல் செய்து வரும் தமக்கு நேற்று அரசியலுக்கு வந்த தம்பியார் பாடம் போதிப்பதா என்று பிரதமர் மஹிந்தர் தமக்குள் கறுவிக் கொண்டிருக்கிறார் எனக் கேள்வி. மஹிந்தரைப் பதவி நீக்கி, வேறு ஒருவரை புதிய இடைக்காலப் பிரதமராக நியமித்தால் ஐம்பதுக்குக் குறையாத எம்.பிக்ககளோடு – அதுவும் பெரும்பாலும் சிரேஷ்ட எம்பிக்களோடு – மஹிந்த ராஜபக்ஷ எதிரணியில் போய்க் குந்திக் கொண்டு இருந்து விடுவார் என்ற செய்தி – தகவல் – ஜனாதிபதிக்கு ஐயம் திரிபற தெளிவாக உணர்த்தப்பட்டு விட்டது எனத் தெரிகிறது. எதிரணியில் அமரக்கூடிய மஹிந்த ராஜபக்ஷவிற்கு முகம் கொடுப்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மிகச் சிக்கலாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். அதனால் அடுத்த நகர்வு என்ன செய்வது என்பதே தெரியாமல் தடுமாறுகிறார் கோட்டாபய.

"விரைவில் நான் எதிரணியில் வந்து உங்களோடு அமர்வேன்" – என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரண்டொரு தினங்களுக்கு முன்னர் சுமந்திரனுக்குத் தகவல் அனுப்பி இருந்தார் என்று நேற்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? பிரதமர் அலுவலக வட்டாரங்கள் அத்தகவலை இன்று உறுதி செய்துள்ளன.

'என் நண்பருக்கு (சுமந்திரனுக்கு) ஒரு செய்தி சொல்லுங்கள். என்னைப் பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்ற முயற்சிகள் நடக்கின்றன. நான் விரைவில் அவருடன் எதிரணியின் பக்கத்தில் வந்து அமர்வேன் என்று சொல்லுங்கள்' – எனப் பிரதமர் ஒரு செய்தியை சுமந்திரனுக்கு தெரியப்படுத்தும் படி வழங்கினார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

நேற்றும் ஒரு சம்பவம் நடந்தது.

இ.தொ.காவின் அமைச்சராக இருந்த ஜீவன் தொண்டமான் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டமை குறித்து யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் ஒரு பேட்டியளித்திருந்தார்.

'அரசிலிருந்து மஹிந்தர் துரத்தப்படப் போகின்றார் என்பதை அறிந்ததும் இ.தொ.காவினர் மெல்ல அரசிலிருந்து கழன்று விட்டனர்' என்ற சாரப்பட சுமந்திரன் கூறியிருந்தார். அந்த விவகாரத்தை தமக்கு நெருக்கமான ஒருவர் மூலம் தமிழிலிருந்து சிங்களத்திற்கு வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்து தொலைபேசி மூலம் அறிந்து கொண்டார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அதை மொழிபெயர்த்த அன்பர் மொழிபெயர்ப்பின் முடிவில் "இதே ஜீவன் தொண்டமான் போன்றோரோடு நெருக்கமாகச் சேர்ந்து பழகியதிலும் பார்க்க சுமந்திரன் போன்றோரோடு நாங்கள் நெருக்கமாகப் பழகி இருந்தால் நல்லாக இருந்திருக்கும் அல்லவா?" என்று கேட்டார். 'ஹா ஹா ஹா....' என்று கெக்கட்டம் விட்டுச் சிரித்த மஹிந்த ராஜபக்ஷ, அதை ஆமோதிப்பது போல பதிலளித்துத் தொலைபேசியை வைத்தார்.

ஆறுமுகம் தொண்டமான் உயிரிழந்த போதும் அவற்றுக்கு நடுவில் இடம்பெற்ற அவரது இறுதிக் கிரியைகள் சமயத்திலும், பின்னரும், ஆறுமுகம் தொண்டமானினது மகன் ஜீவன் தொண்டமானை அரவணைத்துக் கொள்ள வேண்டுமென்பதில் அதிக அளவுக்கு ஈடுபாடு காட்டியவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

என்னோடு பின்னர் ஒரு நாள் பிரதமர் தனியாக உரையாடிய சமயம், ஆறுமுகம் தொண்டமான் கடைசியாகத் தன்னோடுதான் உரையாடிச் சென்றார் என்பதை நினைவு கூர்ந்த மஹிந்த ராஜபக்ஷ 'அவருக்காக (ஆறுமுகம் தொண்டமானுக்காக) அவரது மகனுக்கு நான் அதிகம் செய்ய வேண்டும்' என்று கூறியமை என் காதில் இன்னும் எதிரொலிக்கிறது.

அத்தகைய ஜீவன் தொண்டமான் திடீரென தம்மை விட்டு விலகியமை நிச்சயம் மஹிந்த ராஜபக்ஷவின் மனதை நெருடி இருக்கும் என்று நினைக்கிறேன். செய்தியை மொழிபெயர்த்து அவரது உதவியாளர் குறிப்பிட்டபோது – இவர்களை நம்பியமைக்குப் பதிலாக சுமந்திரன் போன்றோரோடு சேர்ந்து இயங்கி இருக்கலாம் – என்று கூறிய போது இவையெல்லாம் பிரதமரின் மனதில் ஓடியிருக்கும் என நம்புகிறேன்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வயதால் தளர்ந்து விட்டார் என்பது உண்மைதான். ஆனாலும் புதிய அரசியல் சவாலுக்குள் காலம் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி இருப்பதால் – அதன் காரணமாகவோ என்னவோ அண்மைய நாள்களில் அவர் மிகுந்த உற்சாகமாக – மிகுந்த துடிப்போடு – செயல்படுகிறார் என உள்வீட்டு தகவல் ஒன்று தெரிவித்தது.

எதிர்க்கட்சியில் இருந்த படி கடந்த காலங்களில் அவர் நடத்திய சவால் போராட்டங்கள் அரசியல்வாதிகளுக்கு நல்ல முன்னுதாரணம். அதையே இப்போதும் – இந்த வயதிலும் – இனிமேலும் அவரால் வெளிப்படுத்த முடியுமா என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும். ஒரு விடயம் நிச்சயம். அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஓரிரு மாதங்களில் நிச்சயமாக சுமந்திரன் தரப்பினரோடு எதிரணியில் வந்திருந்து அவர் அரசியல் செய்வது தவிர்க்கமுடியாத விவகாரம் ஆகிவருகிறது.

– மின்னல் –

## அரசியல்வாதிகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
லிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இடைக்கால அரசாங்கம் அமைப்பது உள்ளிட்ட ஆறு யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை மகாநாயக்கர்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு அனுப்பியிருந்தனர்.

இந்தக் கடிதத்திற்கு இதுவரையில் எவரும் சாதகமான பதிலை வழங்காத காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பான பிரேரணையை வழங்குவதற்காக அண்மையில் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரரைச் சந்திக்கச் சென்றபோது அவருக்கு அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதேபோல் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அண்மையில் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரரைச் சந்திக்கச் சென்ற போது அவர்களையும் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பெற்றோல் பவுஸர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஒப்புக்கொண்டமையால் போராட்டத்தைக் கைவிடுவதற்குத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் என இலங்கை பெற்றோலிய தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# நெல்லியடியில் குத்திக் கொலை

(ந.லோகதயாளன்)
வடமராட்சி பகுதி விடுதியில் மதுபான விற்பனையின்போது வாய்த் தர்க்கம் ஏற்பட்டதில் இன்று அதிகாலை ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுளார்.

இதன்போது குணசேகரம் குணசோதி என்னும் – நாச்சிமார் கோவிலடி, திக்கம், பருத்தித்துறை என்ற முகவரியைக் கொண்ட ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பாம் பீச்சில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## அரிசிக்கு மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதிக பட்ச சில்லறை விலைகளைக் குறிப்பிட்டு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் நேற்று விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மொட்டைக்கறுப்பான் மற்றும் ஆட்டக்காரி தவிர்ந்த வெள்ளை அல்லது சிவப்பு நாட்டரிசி கிலோ ஒன்று 220 ரூபாவாகவும் வெள்ளை அல்லது சிவப்பு சம்பா அரிசி கிலோ ஒன்று 230 ரூபாவாகவும் கீரிச்சம்பா அரிசி ஒரு கிலோ 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையம் தெரிவித்துள்ளது.

அரச, தனியார் மற்றும் தோட்டத் துறையைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்குவார்கள் என்றும் அன்றைய தினம் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்துவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டில் சேமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

சாமிப் படத்துக்கு விளக்கேற்றிவிட்டு வீசிய தீக்குச்சி சாமி அறையில் வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மீது பட்டு வீடு தீப்பற்றி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாங்கிச் சேமிக்கப்பட்ட பெற்றோல் நிரப்பிய கான்கள் சாமி அறையில் வைக்கப்பட்டிருந்தன.

வழக்கம் போல் அந்த மாணவி சாமி அறையில் விளக்கேற்றி விட்டு தீக்குச்சியை கீழே வீசியுள்ளார். அதிலிருந்து பறந்த தீப்பொறி பெற்றோல் மீது பட்டு வீடு தீப்பற்றி எரிந்து உள்ளது.

உயிரிழந்த மாணவியின் உடல் சங்காணை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. தீப்பற்றிய வீட்டைப் பொலிஸார் மூடியுள்ளனர். மேலதிக விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.



# ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் ஆரம்பித்து வைத்தவர்கள் நாமே!

## உரிமைகோரினார் இரா.சாணக்கியன்



தென்னிலங்கையில் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கண்டு அஞ்சிய போது, மட்டக்களப்பிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களே ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இன்று காலை மரண வீடு ஒன்றுக்கு சென்றிருந்த போது தாய் ஒருவரை சந்தித்துப் பேசினேன். அவர் எங்கே செல்கின்றீர்கள் என என்னிடம் கேட்டார். நான் இங்கு வருகை தரவுள்ளமையை அவரிடம் சொன்னேன். அவர் என்னிடம் அங்கே என்ன பேசப்போகின்றீர்கள் என என்னிடம் கேட்டார். பின்னர் 'கோட்டா கோ கோஷம்' என கூறாதீர்கள். 'கோட்டா கோ ஜெயில்' என கூறுங்கள் என சொன்னார். அது உண்மைதான்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இராஜாங்க அமைச்சை எடுத்தால் மாலை கிடக்கும் என எதிர்பார்த்த அவருக்கு மக்கள் செருப்பைக் காண்பித்துள்ளனர். அங்கே செருப்பைக் காண்பித்த அந்த அம்மாவின் கைகளுக்கு தங்கத்தில் காப்பு போட வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தற்போது தான் அரசாங்கத்திற்கு எதிராகக் கண்டி முதல் கொழும்பு வரையான போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

ஆனால் நாங்கள் இந்த அரசாங்கம் வேண்டாம் எனத் தெரிவித்து பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தை இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஆரம்பித்தவர்கள். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# குளியாப்பிட்டிய பகுதியில் கோர விபத்து; 14 வயது சிறுவன் உட்பட மூவர் கைது!

## டிஃபெண்டர் ரக வாகனத்துக்கு தீ வைப்பு

குளியாப்பிட்டிய – மாதம்பே வீதியின் கனதுல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக 14 வயது சிறுவன் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்தை அடுத்து குறித்த பகுதியில் இருந்த மக்கள் டிஃபெண்டர் ரக வாகனத்துக்கு தீ வைத்துள்ளனர்.

குளியாப்பிட்டிய – மாதம்பே வீதியின் கனதுல்ல பகுதியில் சைக்கிள் ஒன்றும் டிஃபெண்டர் ரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளைச் செலுத்திய நபரே உயிரிழந்துள்ளார்.



மேற்படி நபர் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ரம்புக்கனை சம்பவத்தில்

# 15 வயது சிறுவன் மீதும் துப்பாக்கிப் பிரயோகம்!

ரம்புக்கனையில் மக்கள் முன்னெடுத்த போராட்டத்தின்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 வயது சிறுவன் ஒருவரும் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அறிக்கை கோருவதற்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ரம்புக்கனையில் எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் தில் ஒருவர் உயிரிழந்ததோடு, பலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# முழு மாற்றம் வேண்டும்

**“தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும், நாட்டில் எந்த விதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை” எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. கூறியிருக்கின்றமை உண்மைதான்.**

**ஆனால், அந்தக் காரணத்துக்காக இவ்விடயங்களில் நாம் விட்டேத்தியாக – பார்வையாளர்களாக – தள்ளி நின்று விட முடியாது. முழு இலங்கைத் தீவுக்குமான இந்தப் பிரச்சினை நேரடியாகத் தமிழர்களையும் பாதித்து நிற்கின்றமையால் அச்சிக்கலில் நாமும் பங்குதாரர்களாகிப் பணியாற்ற வேண்டிய கடப்பாடு இயல்பாக வந்த விடுகின்றது.**

**“இராவணன் ஆண்டாலென்ன, இராமன் ஆண்டாலென்ன, கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன?” – என்று நாம் மௌனித்து இருந்து விட முடியாது. காத்திரமாகப் பங்காற்றியேயாக வேண்டும். அது தவிர்க்க முடியாத பொறுப்பாகும்.**

**இந்த விவகாரத்தில் – இலங்கைத் தீவின் தற்போதைய அரசியல், பொருளாதார சிக்கல்களில் – செல்நெறியை தீர்மானிக்கப் போகின்றவர்கள் தென்னிலங்கை சிங்களவர்களாயினும், நாம் தமிழர்கள், அதில் கணிசமான அளவு பங்களிக்க முடியும்; செல்வாக்குச் செலுத்த முடியும்.**

**நடந்து முடிந்த விடயங்களுக்கும் பின்னடைவுகளுக்கும் பிரதமரே பொறுப்பு என்று அவர் மீது குற்றம் சுமத்தி, அவரை வெளியேற்றுவதன் மூலம் புதிய அரசை அமைத்து, நிலைமையைச் சமாளிக்கலாம் எனத் தென்னிலங்கை அரசியல் புத்திஜீவிகள்(?) சிலர் கணக்குப் போடுகின்றனர்.**

**இப்படிப் பிரதமரை மாற்றுவதால் பிரயோசனமில்லை என்று சுமந்திரன் குறிப்பிடுகின்றமை முற்றிலும் சரியான கூற்றுத்தான்.**

**பிரதமரை மாற்றுவது என்பது தலையிடிக்கு தலையணையை மாற்றும் ‘புத்திபூர்வ’ நிலைக்கு ஒப்பானதுதான். பிரதமர் மாறினாலும் பழைய மொட்டுக் கட்சிக் குழுவினர்தான் திரும்பவும் ஆட்சியதிகாரக் கதிரைக்கு வருகின்றனர்.**

**இருக்கும் பிரதமரை மாற்றி, பழைய ஜனாதிபதியே புதிய வடிவத்தில் மொட்டுக் கட்சி அரசை ஸ்தாபிப்பது என்பது புதிய மொந்தையில் பழைய கள்ளு என்ற அர்த்தத்தைத்தான் தரும்.**

**இத்தகைய நெருக்கடிக்குள் தமிழர்கள், சிக்கிச் சீரழிந்து என்ன பயன்?**

**மொட்டுக் கட்சிக் கூட்டணியில் முன்னர் இருந்தவர்கள் – அதாவது கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வரை ஒரு கூட்டணியாக இருந்து ஆட்சி புரிந்தவர்கள் – இப்போது பிணங்கி பிரிந்து நிற்கின்றார்கள். அவர்களே இப்போது தங்களுக்குள் பேசி சர்வ கட்சி அரசு அல்லது இடைக்கால அரசு அல்லது ஒருமித்த தேசிய அரசு என்ற பெயருடன் – புதிய கதையுடன் – வருகின்றார்கள்.**

**சுருக்கமாகச் சொல்வதானால், கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் வரை இந்த நாட்டை ஆட்சி செய்து, அதிகாரம் செலுத்தி, அதனைக் குட்டிச் சுவராக்கிய தரப்புகளே இப்போது திரும்பவும் இடைக்கால அரசு என்ற பெயரில் அதிகாரத்துக்கு வரப்பார்க்கின்றார்கள் – ஒரேயொரு மாற்றத்துடன். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மாற்றி விட்டு, மற்றைய ராஜபக்ஷக்களை ஒதுக்கி விட்டு, வர முயல்கின்றார்கள்.**

**இந்தத் திட்டத்தினால் நாட்டுக்கு மீட்சி ஏதும் கிடைக்கப்போவதுமில்லை. மாற்றம் ஏதும் வந்து விடப்போவதுமில்லை. இதனைத்தான் வெறுமனே பிரதமரை மாற்றுவதினால் பயன் ஏதும் கிட்டப்போவதில்லை என சுமந்திரன் கூறுகின்றார்.**

**ஜனாதிபதி, பிரதமருடன் முழுக் கட்டமைப்பு ரீதியான மாற்றமே நாட்டை அழிவிலிருந்து மீட்டெடுக்க ஒரே வழியாகும்.**

# தேசிய நலனுக்காக பெருநாளில் இறைவனிடம் பிரார்த்திப்போம்!

## காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலைமையாலும், பொருளாதார சீர்குலைவாலும், நாட்டு மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தேசிய நலனுக்காகப் பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போமாக என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள ஈதுல் பித்ர் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் ஈகைத் திருநாள் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டின் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளின் விளைவாக, இலங்கையின் அரசியல் கட்டமைப்பு முற்றாகச் செயலிழந்து, நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள மிகவும் நெருக்கடியான நிலைமையிலும் கூட, ஆட்சிப்பீடத்திலிருந்து அகன்று சுமுக நிலை தோன்ற வழிவிடுமாறு சகல இன மக்களும் ஒருமித்து எழுப்பிவரும் கோஷம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அது ஜனநாயகத்தை அறவே மதிக்காத அப்பட்டமான சுயநலத்தையே வெளிப்படுத்துகின்றது.

நாட்டுமக்களின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்துக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளிநாட்டுச் செலாவணியின்மையாலும், நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாலும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சிரமங்களுக்கு மத்தியில் அப்பாவிப் பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நிற்க நேர்ந்திருக்கிறது.

பொதுவாக எல்லா சமுகத்தினரையும் போல, முஸ்லிம்களும் புனித நோன்பு காலத்திலும் கூட மிகவும் இக்கட்டான நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

பிரச்சினைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் பொறுமையுடன் நோன்பை நோற்று, இறை வணக்கங்களில் அதிகமாக ஈடுபட்டதோடு, ஈகைப் பண்பையும் இயன்றவரை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

எனவே இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டு, சுமுக நிலை தோன்றுவதற்கு பெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம். அத்துடன், பல்வேறு நாடுகளிலும் இன்னல்படும் உலக முஸ்லிம்களுக்காகவும் அல்லாஹ்விடம் கையேந்துவோம். – எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சு பதவிகளுக்காக நாம் பேரம் பேசவில்லை!

## செந்தில் தொண்டமான் விளக்கம்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை எவராலும் அசைத்து விடவும் முடியாது, அழித்துவிடவும் முடியாது என காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே செந்தில் தொண்டமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

அன்று முதல் இன்றுவரை கொள்கை அடிப்படையிலேயே காங்கிரஸ் பயணிக்கின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸின் உயரிய தலைவர்கள் காட்டிய வழியில் இருந்து நாம் மாறவில்லை.

மக்களுக்காக மக்கள் பக்கம் நின்று, சரியான திசையில் முன்னோக்கி பயணிக்கின்றோம். இ.தொ.கா. என்ற அமைப்பை எப்போதும் எவராலும் அழித்துவிடமுடியாது.

அமைச்சு பதவிகளுக்காக நாம் பேரம் பேசவில்லை. கடந்த காலத்தில் ஆளுங்கட்சியில் ஐந்து ஆண்டுகளாக சிலர் அரங்கேறியதுபோன்று இராஜினாமா கூத்துகளையும் அரங்கேற்றவில்லை. கட்சி கலந்துரையாடி முடிவை எடுத்தது. அரசிலிருந்து காங்கிரஸ் கம்பீரமாக வெளியேறியது.

பாரத பிரதமர் நரேந்திர மோடி, மலையகம் வந்தார். எம்மை நேரில் வந்து சந்தித்தார். தற்போது தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்துள்ளார். மலையக மக்களுடன் நாங்கள் இருக்கின்றோம் என்ற செய்தியை பாரத பிரதமர் வழங்கியுள்ளார்.

பல கூட்டங்களை இரத்து செய்துவிட்டு, மலையக மக்களுக்காக இங்குவந்த பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலைக்கு எங்கள் நன்றிகள்.– எனத் தெரிவித்துள்ளார்.

# பாரிய கண்டனத்தைப் பெற்ற முதலாவது அரசாங்கம் இதுவே!

## திஸ்ஸ அத்தநாயக்க சாடல்



நாட்டின் வரலாற்றில் பாரியளவிலான மக்களின் கண்டனங்களைப் பெற்ற முதலாவது அரசாங்கம் இதுவே என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.


மேதின பேரணியில் கலந்துகொண்டு பேசிய அவர், புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு சஜித் பிரேமதாஸவிற்கு பெரும்பான்மையான மக்களின் ஆதரவு இருப்பதாகவும் கூறினார்.

ஜனாதிபதியை பதவி விலகுமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோஷமிட்டுவரும் நிலையில் எதிர்வரும் சில வாரங்களில் போராட்டங்கள் பலனளிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதனை அடுத்து சஜித் பிரேமதாஸவின் தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கும் ஆளும் தரப்பை சேர்ந்தோர் மதிப்பளிப்பதில்லை



## ஓமல்பே சோபித தேரர் விசனம்

பிரதமர் பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாத வகையில் ஸ்திரமான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் மகாசங்கத்தினருடனான பேச்சில் கலந்துக்கொள்வது அவசியமற்றது என வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தன்னிடம் தெரிவித்தார் எனக் கூறிய ஓமல்பே சோபித தேரர், ஆளும் தரப்பினர் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைக்கும் மதிப்பளிப்பதில்லை எனவும் விசனம் வெளியிட்டார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சி தலைவர்களுக்கும், மகாசங்கத்தினருக்குமிடையில் ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பில் உள்ள இலங்கை மன்ற கல்லூரியில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கு இடைக்கால அரசாங்கத்தின் ஊடாகத் தீர்வு காணுமாறு மகாநாயக்க தேரர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள். இடைக் கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சிகளிடம் மாறுப்பட்ட கருத்து வேறுபாடு காணப்படுவதால் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதில் இழுபறி நிலைமை காணப்படுகிறது.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் மேற்கொண்ட பேச்சில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டன. அதற்கமைய முதற்கட்டமாக இடம்பெற்ற பேச்சு சாதகமாக உள்ளது. அடுத்தக்கட்ட பேச்சை முன்னெடுத்து விரைவில் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம்.

மகாசங்கத்தினருடனான பேச்சில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் எவரும் கலந்துக்கொள்ளாதமை கவலைக்குரியது. பேச்சில் கலந்துக் கொள்ளுமாறு பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸிற்கு அழைப்பு விடுத்தோம்.

பிரதமர் பதவி தொடர்பில் ஸ்திரமான தீர்மானத்தை எடுத்துள்ளேம். பிரதமர் பதவியில் எவ்வித மாற்றமும் ஏற்படாது எனவே இடைக்கால அரசாங்கம் தொடர்பான பேச்சில் கலந்துக்கொள்வது அவசியமற்றது. என அவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவிற்குள் எடுக்கும் தீர்மானத்துக்கு முன்னுரிமை வழங்காமல் மக்களின் அபிலாஷைகளுக்கும் மதிப்பளித்து இந்தப் பேச்சில் நடுநிலையான முறையில் கலந்துகொள்ளுமாறு பொதுஜன பெரமுனவின் தவிசாளரிடம் வலியுறுத்தினேன், இருப்பினும் பொதுஜன பெரமுன சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்காமல் ஆளும் தரப்பினர் செயற்படுகின்றமையின் விளைவை வெகு விரைவில் அனுபவிப்பார்கள். – என்றார்.

# மோட்டார் சைக்கிள் முல்லையில் தீக்கிரை!

முல்லைத்தீவு மல்லாவி திருநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இரு குழுக்களுகிடையே மோதல்கள் இடம்பெற்றன எனவும் இதனால் பிரதேசத்தில் பதற்றமான சூழல் காணப்பட்டதாகவும் சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஞாயிறு இரவு 10.30 மணி அளவில் மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது .

இவ்வாறு எரியூட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் தலைக்கவசம் மற்றும் பாதணிகள் என்பனவும் காணப்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தில் யாரை யாவது கடத்தி வந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மல்லாவி பிரதேசத்தில் குறிப்பிட்ட சில இளைஞர்கள் மல்லாவி பொலிஸாரின் துணையுடன் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையுடன் இரவு பகல் வேளைகளில் மது போதையில் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்துதல் மற்றும் பொருள்களைக் கொள்ளை இடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்கின்ற போதும் அது தொடர்பில் பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்றும் ஏற்கனவே பிரதேச மக்கள் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கையின் அரசியல் பிரமுகர்களின் படங்களுடன் பிரான்ஸில் போராட்டம்!

பிரான்ஸ் நாட்டில் மே தின மக்கள் எழுச்சி போராட்டம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

தமிழீழ மக்கள் பேரவை, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டில் ஞாயிற்றுக்கிழமை மாலை 03 மணியளவில் குறித்த மே தினத்தில் கண்டன போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முன்னெடுக்கப்பட்ட குறித்த மேதினபோராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு இலங்கை மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோஷங்களுடன் இலங்கை அரசியல் பிரமுகர்களின் படங்களை பதாதைகளாக தாங்கி அவர்களை நாங்கள் கண்டிக்கின்றோம் என்ற வாசகங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்

# வவுனியாவில் கைது செய்யப்பட்டவர்களிடம் கூரிய ஆயுதங்கள், பதாகைகள் என்பன மீட்பு





வவுனியா, ஓமந்தைப் பகுதியில் கைது செய்யப்பட்டவர்களிடம் ஆவா குழுவின் பதாகைகள் மீட்கப்பட்டமையுடன், 16 பேரை கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை, கோதாண்டர் நொச்சிக்குளம் பகுதியில் ஆவா குழு என பெயரிடப்பட்ட பதாகைகளுடன் 40 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்கள் குறித்த பகுதிக்கு சென்ற போது சிலர் தப்பியோடி இருந்தமையுடன், 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 'ஆவா குழு வவுனியா' என பெயரிட்ட பதாகைகளுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையுடன், கூரிய ஆயுதங்களையும் தம்வசம் வைத்திருந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட 16 பேரும் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கூரிய ஆயுதங்கள், பதாகைகள், கைத்தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் வவுனியா மருதங்குளம், அரசன்குளம், கோவில்குளம், கோழியாகுளம், சாஸ்திரிகூழாங்குளம், நெளுக்குளம், ஓமந்தை மற்றும் முல்லைத்தீவு, தலைமன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 18 தொடக்கம் 26 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் எனவும், இருவர் 44 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 8 பேர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள், நால்வர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள், இருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள், ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர், ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.

# உலகத்துடன் ராஜதந்திர உறவுகளைப் புதுப்பித்து உதவிகளைப் பெற்று மக்கள் சக்தி சேவையாற்றும்!

## பதவிகளை எதிர்பார்க்கோம் என்கிறார் சஜித் பிரேமதாஸ



இடைக்கால அரசாங்கத்தில் பங்குகொள்ளும்படி யாரேனும்என்னைசெல்வாக்குசெலுத்த முயற்சித்தால், அவர்களின் பெயர்களை வெளிப்படுத்திவிட்டு வீட்டுக்குச் செல்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

நாங்கள் இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிக்கவும் பொது நிதியை கொள்ளையடித்தவர்களுடன் தொடர்புகொள்ளவும் விரும்பவில்லை. மக்கள் ஆணையுடன் ஆட்சி அமைக்க மட்டுமே நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது. நான் அதை ஏற்க மறுத்துவிட்டேன். அரசமைப்பு நெருக்கடியின்போது இது நடந்தது. ஆனால் நான் மறுத்துவிட்டேன்.

மாற்று அரசாங்கம் அமைக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மாற்றப்படுவார் என்றும் சிலர் கூறுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழப்பதில் எனக்கு கவலையில்லை. யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை விநியோகிக்கும் 'ஹஸ்மா' போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்திய ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் திட்டங்களைத் தொடங்குவதில் சிரமம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் உலகத்துடனான இராஜதந்திர உறவுகளை புதுப்பித்து அதற்கான உதவியைப் பெறும்' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதிக்கு இறங்க முடியாத நிலையில் பொதுஜன பெரமுன உறுப்பினர்கள்

## தயாசிறி சாட்டை



தன்னிச்சையான மற்றும் முட்டாள்தனமான தீர்மானங்களின் விளைவை அரசாங்கம் தற்போது எதிர்கொள்கிறது.

கூட்டணியிலான அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்கவில்லை. இன்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் வீதிக்கு இறங்க முடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலா ளர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

ஜோன்ஸ்டன்பெர்னாண்டோ,ரோஹிதஅபேகுவணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் நாடாளுமன்றில் பிரதான பேச்சாளர்களாக உள்ளனர்.

நாட்டின் முக்கிய பிரச்சினை தொடர்பாக எவரையும் கருத்துரைக்க இவர்கள் விடுவதில்லை.

மறுபுறம் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற கூட்டத்தொடரை வேண்டுமென்றே சர்ச்சைக்குள்ளாக்குவார்கள் இவ்வாறானவர்களாலேயே மக்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வெறுக்கிறார்கள். தவறானவர்களைதெரிவுசெய்ததற்குமக்களேபொறுப்புக்கூற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்தை ஸ்தாபித்தோம். அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைவதற்கு முன்னர் அரச தலைவர்கள் கூட்டணியின் ஏனைய கட்சிகளுடன் எவ்வித பேச்சுகளையும் முன்னெடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளின் கருத்துக்களுக்கும்,ஆலோசனைகளுக்கும் மதிப்பளிக்கவில்லை. பெரும்பான்மை பலம் எம்மிடம் உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு பொதுஜன பெரமுன செயற்பட்டது. அரசாங்கத்தின் தன்னிச்சையான மற்றும் முட்டாள்தனமான தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் இன்று முழு நாட்டுக்கும் சாபமாக மாறியுள்ளன.

நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது அரசியலில் அங்கம் வகிக்காத ஒருவரை ஜனாதிபதியாகக் கொண்டு வர வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள். தற்போது அதே மக்களே 'கோ ஹோம் கோட்டா' என நாடுதழுவிய ரீதியில் போராட்டங்க ளில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டு மக்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விமர்சிப்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். நாடாளுமன்றில் ஒருசிலரது முறையற்ற செயற்பாடுகளால் ஒட்டுமொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் விமர்சனத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுவணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டே ஆகியோர் நாடாளுமன்றின் பிரதான பேச்சாளர்கள். நாட்டின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துரைக்க இவர்கள் இடமளிப்பதில்லை.

மறுபுறம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் வெறுக்கத்தக்கவகையில்நாடாளுமன்றில்செயற்படுகிறார்கள். பெண்களையும், நாடாளுமன்றக் கோட்பாடுகளையும் அவமதிக்கும் வகையில் எதிர்த்தரப்பினர் எது கதைத்தாலும் அதற்குப் பின்னால் இருந்துக்கொண்டு கூச்சலிட்டு எதிர்ப்புத் தெரிவிப்பதே இவர்களின் பிரதான கடமையாக உள்ளது. இவ்வாறானவர்களை மக்கள் இனியும் தெரிவு செய்யக் கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு நாட்டு மக்கள் ஒன்றிணைந்து வலியுறுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்தாலும், அது அரசமைப்பிற்கு உட்பட்டதாக அமையாது.ஜனாதிபதியைப் பதவி நீக்குவது இலகுவானதல்ல.இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக நடப்பு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே பல்வேறு வழிமுறைகளில் முயற்சிக்கிறோம். – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை பலர் வேண்டுமென்றே மறைக்கின்றார்கள்!

## பேராயர் கர்தினால் குற்றச்சாட்டு

தேர்தலில் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய விவரங்களை பலர் வேண்டுமென்றே மறைக்கிறார்கள் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களைத் தவிர பலர் அறிந்திருந்தார்கள் என்றும் அதனை முன்கூட்டியே தெரிவித்திருந்தால் அந்த மக்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

மேலும் சிலர் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பிய காரணத்தால் மக்கள் பலியாக்கப்பட்டனர் என்றும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஆகவே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உட்பட அனைத்து அதிகாரிகளும் தங்கள் கடமைகளில் இருந்து தவறிவிட்டனர் என பேராயர் குற்றம் சாட்டினார்.

மூன்று வருடங்களுக்கும் மேலாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் தற்போது நடைபெறும் மக்கள் போராட்டம் வெற்றி பெறும் என்றும் பேராயர் குறிப்பிட்டார்.

# எரிபொருள்கள் விநியோக நடவடிக்கைக்கு இடையூறு

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர வேதனை

அரச முகவர் எரிபொருள் தாங்கிகள் மூலம் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெறுகின்றன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில தனியார் எரிபொருள் தாங்கி சாரதிகள் விநியோக பணிகளுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் எனவும் இதனால் துரிதகதியில் இடம்பெறும் எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்படுகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது கிராமப் புறங்களுக்கு பவுஸர்களில் கொண்டு செல்லப்படும் எரிபொருளின் அளவை அதிகரிக்கவும், டிப்போக்களுக்குத் தேவையான எரிபொருளை மட்டும் பவுஸர்களில் கொண்டு செல்லவும் அமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்த செயற்பாடுகளை எவ்வித இடையூறும் இன்றி முன்னெடுக்க புதிய அறிவுறுத்தல்களை அமைச்சர் வெளியிட்ட போதும் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

# ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டத்தை முன்வைத்தால் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகத் தயார்!

## டிலான் பொரேரா கூறுகிறார்



இடைக்கால அரசாங்கம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டத்தை முன்வைத்தால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் இடைக்கால அரசாங்கத்தில் பிரதமர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவிற்கு வழங்குவதற்கு தானும் உடன்படுகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யார் பிரதமரானாலும் எந்த மாற்றமும் வராது

## விளக்குகின்றார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், மே02

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும் நாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப் போவதில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது யார் பிரதமராக வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்பொழுது அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை காணப்படுகின்றது. பிரதமரை மாற்ற வேண்டும் என்று ஒரு குழு விடாப்பிடியாக நிற்கின்றார்கள். எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வருவதற்குத் தீர்மானித்துள்ளது.

தற்போதைய பிரதமர் பதவி விலகினால் புதியவர் பிரதமராக வருவார். அவுடன் ஒரு புதிய அமைச்சரவை உருவாகும். அந்த அமைச்சரவையை உருவாக்குவதற்கு ஐவர் கொண்ட குழுவினை உருவாக்கியுள்ளார்கள். அந்த ஐவர் கொண்ட குழுவில் உள்ளோரில் எமக்குத் திருப்தியில்லை. அவ்வாறான நிலையில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதன் மூலம் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

ஜனாதிபதி நாட்டின் தலைவர். அவர் அவ்வாறே இருப்பார். அதேபோல பிரதமர் பதவி விலகினால் இன்னொரு பிரதமர் வருவார். அவருடன் இணைந்து புதிய அமைச்சரவை உருவாகும். அவ்வாறு உருவாகும் அமைச்சரவை தற்போதுள்ள அமைச்சரவையை விட மிகவும் கொடூரமான அமைச்சரவையாக இருக்குமாக இருந்தால் என்னாகும் என நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும்.

எனவே நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றி, நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதன் மூலமே நாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்படும்.

மாறாக, இந்த நாட்டில் எவர் பிரதமர் பதவிக்கு வந்தாலும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்பட்டு விடப் போவதில்லை. அத்தோடு நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்திலும் கூட்டமைப்பு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எனினும் அந்த விடயம் தொடர்பில் நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஆராய்ந்து முதல்கட்டமாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். - என்றார்.

மேலும், தற்பொழுது இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கடந்து புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ள தமது உறவுகள் இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வர வேண்டும். - என்றார்.

# அனைவரதும் பங்களிப்பும் இருந்தால் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண்போம்

## ரணில் உத்தரவாதம்



புதிய அரசியல் திருத்தங்கள் ஊடாக நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைகளை வென்று விட முடியாது. கட்சிகள் கொள்கைகளைக் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து புதிய திட்டங்களுடன் செயற்பட முன் வர வேண்டும்.

அதன் ஊடாகவே நெருக்கடி நிலையை வெற்றிகொள்ள முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாத அரசாங்கத்தால் பயன் இல்லை அனைவரினதும் பங்களிப்பும் அவசியமானது இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எம்மால் முடியும், அதற்கு புதிய திட்டங்கள், கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் தேசிய ஊழியர் சங்கம் ஒழுங்கமைத்திருந்த மே தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய போதே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக இன்றைய தொழிலாளர் தின கூட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. பல தொழிற்சங்கங்களின் மே தின நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

இன்று மக்கள் நாடாளாவிய ரீதியில் ராஜபக்ஷ அரசாங்கத்தை வீடு செல்லக் கோரி போராட்டங்கள் முன்னெடுத்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடிக்கு மேலதிகமாக அரசியல் நெருக்கடி நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியல் திருத்தங்களை கொண்டு வருவதில் பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொள்ள முடியாது. 21 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதன் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து 19 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.

பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியாத அரசாங்கத்தால் பயனில்லை. மீண்டும் நாடு மோசமான நிலைக்கு செல்லவே நேரிடும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு எம்மால் முடியும். அதற்கு புதிய திட்டங்கள், கொள்கைகள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

முதலில் சர்வதேச நாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்தக் கூடிய ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும். வருமானங்களைப் பெற்றுத் தரக்கூடிய வரிகளை அதிகரிக்க வேண்டும், அரசின் செலவினங்களைக் குறைக்க வேண்டும்.

மேலும் அரசின் நிதிக்கட்டமைப்பு நாடாளுமன்றத்துக்கு ஒப்படைக்க வேண்டும். கீழ்மட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு அரசு நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும். வங்கித்துறை கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டும் சீரான கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கும் அரசதுறைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் தோன்றியிருக்கிறது.

இதனால் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். ஏனைய நட்பு நாடுகளுடன் இணைந்து இது தொடர்பில் உதவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

தற்போது நாடு பாரியளவில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு இருக்கிறது. இந்நிலையில் இருந்து மீண்டு வர வேண்டும். இவ்வருடம் அல்லது அடுத்த வருட இறுதி பகுதிகளுக்குள் நெருக்கடி நிலைமையை குறைத்து அதனை எம்மால் அடைய முடியும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

# காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலக பதவியிலிருந்து விலகினார் சட்டத்தரணி சிராஸ்!

## சுதந்திரமாகச் செயற்படமுடியாதமை காரணமாம்

காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்துக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினரான சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். இது தொடர்பான கடிதத்தை அவர் நான்கு பிரதான காரணிகளை முன் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு, காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக எந்த நன்மை பயக்கும் விடயங்களையும் முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், அந்த அலுவலகத்தில் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை எனக் குறிப்பிட்டே இந்த இராஜினாமாக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

கடந்த 2021 டிசெம்பர் 13 ஆம் திகதி சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் (ஓ.எம்.பி) உறுப்பினராக நியமிக்கப்பட்டார்

இந் நிலையிலேயே சுமார் நான்கு மாத காலத்துக்குள்ளேயே அவர் அப்பதவியிலிருந்து ராஜினாமா செய்கிறேன் என அறிவித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகம் சுதந்திரமாக செயற்படுவதற்கு அரசாங்கம் போதுமான அனுசரணையை அளிக்கவில்லை என ராஜினாமாக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், ஒருங்கிணைந்த நிதியின் மூலம் போதுமான நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அது செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் மீது நீதி அமைச்சின் தலையீடுகள், ஒப்புக் கொள்ளப்பட்டதன் பிரகாரம் அலுவலகத்துக்குத் தேவையான உதவிகளை வழங்க வெளிவிவகார அமைச்சு தவறியமை, காணாமல் போனோர் அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக முன்னெடுப்பதைக் கட்டுப்படுத்தும் அந்த அலுவலகத்தின் தற்போதைய யாப்பு உள்ளிட்ட காரணிகளைத் தனது ராஜினாமாவுக்கான காரணிகளாக சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் முன்வைத்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த உதவியையும், நிவாரணத்தையும் வழங்க முடியாது போயுள்ளதாகவும் அதனால் தான் ராஜினாமா செய்கிறேன் எனவும் அந்தக் கடிதத்தில் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் குறிப்பிட்டுள்ளார்.

# நுவரெலியாவில் மூலப் பொருள்களின் விலையைக் காட்சிப்படுத்தி வடை!

நுவரெலியா, மே 03

நுவரெலியா பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் வர்த்தகர் ஒருவர் வடையின் விலையை காட்சிப்படுத்தாமல் வடை தயாரிக்கும் மூலப் பொருள்களின் விலையைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், கடந்த ஆட்சியில் (2019) விற்பனையான விலையையும் தற்போதைய ஆட்சியில் விற்பனையாகும் (2022) விலையையும் காட்சிப்படுத்தி வடை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

பொருள்களின் விலையேற்றத்தால் தாம் வடையின் விலையை அதிகரித்துள்ளதாகவும், வடை விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர்கள் வினவியதால், வடை தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் விலையைக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

# ஹரினுக்கு பேச தெரியவில்லை அதனாலேயே வாக்குவாதம்!

## பொன்சேகா விளக்கம்



மே தினக் கூட்டத்தில் தம்முடன் மோதலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் முறைப்பாடு செய்துள்ளேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்பீல்ட்மார்ஷல்சரத்பொன்சேகாதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பெர்னாண்டோவுக்கு எதிராக கட்சித் தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளேன் எனவும், அவர் நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன் எனவும் பீல்ட் மார்ஷல் பொன்சேகா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

ஹரின் பெர்னாண்டோ பொதுமக்கள் முன்னிலையில் என்ன சொல்ல வேண்டும், எதைச் சொல்லக் கூடாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தநிலையில் மே தினப் பேரணியில் பேச்சாளர் பட்டியல் தொடர்பாகவே அவருடன் தமக்கு வாக்கு வாதம் பொன்சேகா குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள சில உறுப்பினர்களின் செல்வாக்கை அதிகரிக்கும் வகையில் பேச்சாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சில பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பேரணியில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

எனினும் தாம், அதற்கு கண்ணியமான முறையில் எதிர்ப்பு தெரிவித்தபோது பெர்னாண்டோ தவறாக நடந்து கொண்டார்.

இதுபோன்ற நடத்தை கட்சியின் ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அவர் எதிர்காலத்தில் அப்படி நடந்து கொள்ளக்கூடாது என சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

இதேவேளை, மே தின பேச்சாளர் பட்டியல் கட்சியில் குறிப்பிட்ட சிலரின் நன்மதிப்பை உயர்த்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது என்பதை ஹரின் பெர்னான்டோ மறுத்துள்ளார்.

எவரையும் தனிப்பட்ட ரீதியில் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் தமக்கு இல்லை என்று குறிப்பிட்ட அவர், முழு போராட்டத்துக்கும் தாமே செலவுகளை செய்தார் எனவும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் கட்சி முடிவுகளுக்கு கட்டுப்படாதவர்கள் எதிர்காலத்தில் தனித்து விடப்படுவார்கள் என்றும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

# மட்டு. விபுலானந்தா அழகியற் கல்லூரி விடுதி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில்!



மட்டு. சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் விடுதிகளில் உள்ள மாணவர்களை வெளியே போகவிடாமாலும் வெளியில் இருந்து மாணவர்கள் வளாகத்திற்குள் செல்லவிடாமலும் வாசல் கதவை நிர்வாகம் பூட்டியுள்ளதையடுத்து மாணவர்கள் நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிலையம் நேற்று (திங்கட்கிழமை) காலை 9 மணியளவில் பூட்டியதுடன் விடுதியில் தண்ணீர் மின்சாரத்தை தடை செய்துள்ளதையடுத்து நீதி கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கடந்த 29 ஆம் திகதி இரு மாணவர்களை விரிவுரையாளர் தாக்கிய சம்பவத்தையடுத்து அங்கு விரிவுரையாளரை தடுத்து வைத்து மாணவர்கள் நீதிகோரி போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒருவாரத்தில் தீர்வு பெற்றுத்தரப்படும் என பல்கலைகழக நிர்வாகம் உறுதிமொழி வழங்கியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றது அதில் உடனடியாக மாணவர்கள் விடுதியைவிட்டு வெளியேற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் உடனடியாக வெளியேறமுடியாத சூழல் இருக்கின்றது பொருளாதாரப் பிரச்சினை உட்பட வாகனப் பிரச்சினைகள் இருக்கின்றன.

இதனால் மாணவர்கள் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக நேற்று காலை கூடி சுமுகமான தீர்வை பெற்றுக்கொள்ள தீர்மானித்த நேரத்தில் இந்த வாசல்கதவை பூட்டி இந்த அராஜக செயற்பாடுகளை நிர்வாகம் ஈடுபட்டுள்ளதை மிகவும் கண்டிக்கின்றோம் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மாணவர்கள் தொடர்ந்து நிர்வாகத்துக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறு பூட்டிய கதவின் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி செயலகப்பகுதியில் கலகத்தடுப்பு பொலிஸார் குவிப்பு

காலிமுகத்திடல் பகுதியிலுள்ள ஜனாதிபதி செயலகத்தின் பிரதான வாயில் பகுதியில் கலகத்தடுப்பு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

காலிமுகத்திடல் பகுதியில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நேற்று (திங்கட்கிழமை) 24 ஆவது நாளாக ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கோரி மக்கள் எழுச்சிப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையிலேயே நேற்று காலையில் இருந்து குறித்த பகுதியில் கலகத்தடுப்பு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் குறித்த பகுதியில் இதுவரை எவ்வித வன்முறைகளும் இடம்பெற்றன என எவ்வித செய்திகளும் வெளியாகவில்லை.

இந்நிலையில் மேற்படி பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ரம்புக்கனை ஆர்ப்பாட்டம் மீதான துப்பாக்கிப் பிரயோகம்; நான்கு துப்பாக்கிகள் அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு!

கேகாலை மாவட்டம் – ரம்புக்கனை நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொலிஸார் கலைத்தமை, அத்துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து மேலும் பலர் காயமடைந்த சம்பவத்தில், துப்பாக்கிச் சூடு நடத்தப் பயன்படுத்தப்பட்ட நான்கு துப்பாக்கிகளை அரச இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி, எரிபொருள் கோரி ரம்புக்கனை பிரதேச மக்கள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம், அன்றைய தினம் மாலை பொலிஸாரால் பலப் பிரயோகம் செய்து கலைக்கப்பட்டது. இதன்போது கண்ணீர் புகைத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு ஆகியனவும் பதிவாகின.

ரீ 56 ரக துப்பாக்கிகளைக் கொண்டு சுடப்பட்டிருந்தமை பின்னர் முன்னெடுத்த நீதிவான் நீதிமன்ற பரிசோதனைகளின் போதான சாட்சிப் பதிவில் தெரிய வந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டின் போது, 42 வயதான சாமிந்த லக்ஷான் என்பவர் கொல்லப்பட்டிருந்தார். லக்ஷான் மீது துப்பாகிச் சூடு நடத்த பயன்படுத்திய துப்பாக்கியை துல்லியமாக அடையாளம் காண இந்த அரச இரசாயன பகுப்பாய்வை முன்னெடுக்க விசாரணைக் குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஏற்கனவே கேகாலை நீதிவானின் அனுமதி பெறப்பட்ட, சம்பவம் தொடர்பிலான சி.சி.ரி.வி. காணொலிகளின் பதிவுகள் இன்னும் இரு நாள்களுக்குள் அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் கையளிக்கப்படும் என விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கேகாலைக்கு பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திரத்னவும், கேகாலை வலய குற்றத் தடுப்புப் பிரிவின் 3 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியல் உத்தரவின் கீழ் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகன், மருமகன், பேரனை தேடிய தாய் உயிரிழப்பு!

## தொடரும் துயரம்

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரையும் தேடி வந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக ஞாயிற்றுக்கிழமை இரவு மரணமடைந்துள்ளார்.

வவுனியா கிறிஸ்தவகுளம் பகுதியை சேர்ந்த செல்லையா செல்வராணி (வயது 75) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரது மகன்– தங்கராசா தயாபரன் (வயது 41) , மருமகன்– தம்பு தியாகராசா (வயது 56), பேரன் – தியாகராசா மனோகரன் (வயது 31) ஆகிய மூவரும், கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா செட்டிகுளத்தில் விறகுவெட்ட சென்ற போது இராணுவத்தினரால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

அவர்களைத்தேடி வவுனியாவில் கடந்த 1898 நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகன், மருமகன், பேரன் ஆகியமூவரையும்கண்டுபிடித்துதரபோராடியிருந்தார்.

இந்நிலையில் மூவரையும் காணாமலேயே அவர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லிபியாவிற்கு இணையான நெருக்கடியாக மாற்ற சிலர் முயற்சி சில குழுக்களும் குண்டர்களும் பின்னணியில் என்கிறார் விமல்



இலங்கையில்தற்போதுஏற்பட்டுள்ளநெருக்கடியை லிபியாவிற்கு இணையான ஒன்றாக மாற்ற ஒரு சிலர் முயற்சித்து வருகின்றனர் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ எச்சரித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் மே தினக் கூட்டத்தில் பேசிய அவர், எந்த ஓர் ஆட்சி முறைமையும் இல்லாத நாடாக இலங்கை மாறுவதற்கு மக்கள் இடமளித்தால் ஒரு வரலாற்றுப் பிரச்சினை உருவாகும் எனக் கூறியுள்ளார்.

மேலும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்குச் செல்லுமாறு மக்கள் விடுத்த அழைப்பு, ஆட்சிக் கட்டமைப்பில் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தும் என்றும் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே இந்தத் தீர்க்கமான நேரத்தில் போராட்டத்தின் உண்மையான நோக்கத்தை மறந்து விடாமல் மக்கள் அனைவரும் விவேகத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை சில குழுக்களும் குண்டர்களும் இலங்கையில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை இல்லாமல் செய்து நெருக்கடியை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனநாயகத்தின் காவல் தூண் ஊடகம்

## இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம்

- பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன் -
(சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்)




ஜனநாயகத்தின் நான்கு பிரதான தூண்கள் என நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, ஊடகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஜனநாயக தூண்களில் 4 ஆவது இடத்தில் ஊடகங்கள் வருகின்ற போதிலும், அதற்கு மேலுள்ள 3 தூண்களும் சரியாக செயற்படுகின்றனவா? என்பதைக் கண்காணித்து, அவை தொடர்பான விடயங்களினை மக்களுக்கு அறிவிக்கும் முக்கிய பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு.

ஊடகம் (னிஎ-ஷழி) என்பது காவுவது அல்லது கடத்துவது என்று பொருள்படுகின்றது. அவ்வாறான ஊடகங்களில் பத்திரிகை மிகப் பிரதானமானதாகும்.

பத்திரிகை என்பது மனிதர்களுக்கு இடையில் தகவல்களை பரப்புகின்ற வேலையினை செய்கின்றது என்று இலகுவாக கூறலாம். மக்கள் எவ்வாறான விடயங்களில் போதிய அறிவினைப் பெறாமல் காணப்படுகின்றார்களோ அவ்வாறான விடயங்களில் அறிவினை மிகத் தெளிவாக, விரிவாக ஊட்டுபவையாகவும், மக்கள் நலத்திட்டங்கள் வருகின்ற வேளைகளில் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பனவாகவும், மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்பனவாகவும் பத்திரிகைகள் உள்ளன.

மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பெரும்பாலும் தேர்தல் காலங்களில் மாத்திரமே நேரடிச் சந்திப்புக்கள் இடம்பெறும். அவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்து அவர்களுக்கு இடையிலான ஓர் இணைப்புப் பாலமாகச் செயற்படுவதும் மற்றும் தேசிய, சர்வதேச நடப்புக்களை உடனுக்குடன் தெரியப்படுத்துவதும், மக்களுக்கு வேண்டிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதும் பத்திரிகை என்று கூறலாம்.

பத்திரிகை நிறுவனங்கள், அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துக்களை சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தல்களும், தடைகளுமின்றி உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளியிடுவதை பத்திரிகை சுதந்திரம் எனலாம். ஐக்கிய நாடுகள் சபையால் 2022ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருளாக 'டிஜிட்டல் முற்றுகையின் கீழ் பத்திரிகை' என்பது அமைகின்றது.

உலக பத்திரிகை சுதந்திர நாள் என்பது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும், மனித உரிமைகள் சாசனம், பகுதி 19இல் இடம் பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு




நினைவூட்டவும், ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1993 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாக 1991 ஆம் ஆண்டு இந்நாளிலேயே 'பத்திரிகை சுதந்திர சாசனம்' முன்வைக்கப்பட்டது. இந்த 1991ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தின் 26 ஆம் அமர்வில் சிபாரிசு செய்யப்பட்ட 'உலகின் சகல பிராந்தியங்களிற்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கானதும், ஊடக சுதந்திரத்தினதும் பாதுகாப்பிற்கும் மேம்படுத்தலிற்குமான ஆணை' என்ற தொனிப்பொருளில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாக உருவானது.

பத்திரிகைகளின் பிரதான பணி என்பது செய்திகளை அல்லது செய்திக் கட்டுரைகளைச் சேகரித்தல், எழுதுதல், தொகுத்தல், வெளியிடுதல் என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

பத்திரிகைகள் நாளிதழாகவும், வார இதழாகவும், மாத இதழாவும், ஆண்டிதழாகவும் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன

இந்நாளில் ஊடக சுதந்திரத்திற்காகப் பங்களிப்புச் செய்யும் ஒருவருக்கு ஆண்டு தோறும் யுனெஸ்கோ நிறுவனத்தின் யுனெஸ் கோ/கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர். இவ்விருது கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவரின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது. இவர் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 17 இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்து படுகொலைசெய்யப்பட்டிருந்தார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.

இதன்படி பத்திரிகை சுதந்திரம் என்பதனை நோக்குமிடத்து தான் சேகரிக்கச் செல்கின்ற செய்தியினை எவ்வித தடைகளும் இன்றி, தான் பெற்றுக் கொள்ள சென்ற செய்தியினை உண்மை நிலை மாறாது அதன் படியே பெற்றுக் கொள்வதனைக் குறிக்கின்றது. மேலும் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாகத் தகவல்களைப் பெறுகின்ற வேளையில் எவ்விதமான இடையூறுகளையும் எதிர்கொள்ளாது செய்திகளைத் திரிபுபடுத்தாமல் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை உண்மைத் தகவல்கள் எதுவாயினும் அதனை அவ்வாறே வழங்குவதனையே பத்திரிகை சுதந்திரம் எனக் குறிப்பிட முடியும். சுதந்திரமாகச் செய்தி சேகரிப்பதற்கு சம்பவ இடங்களுக்குச் சென்று நிலைவரத்தை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மக்களிடம் உண்மைகளை அறிவதே பத்திரிகை சுதந்திரமாகும். ஊடகவியலாளர்களின் உயிருக்கு எந்த விலை வந்தாலும், வன்செயல் நாட்டின் எந்த இடத்தில் நடந்தாலும் அங்கு சென்று உண்மையை வெளிக்கொணர்ந்து வரும் நிலையினை பத்திரிகை சுதந்திரம் எனலாம். இதன்படி பத்திரிகை சுதந்திரத்தின் பண்புகளைப் பற்றி பார்ப்போமானால்,

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

ஊடகவியலாளர்கள் பிறரின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடக்காதிருத்தல்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைத் தாண்டி பொது நன்மைக்காக செயற்படல்.

விரும்பிய தகவல்களை எந்த தடையும் இன்றி பெறக் கூடியதாக இருத்தல்.

உண்மை மற்றும் துல்லியமான செய்திகளை வெளியிடல்.

சுதந்திரமாக கருத்து தெரிவிக்கின்ற உரிமை காணப்படல்.

சமூக கலாசாரங்களை பேணும் வகையில் செயற்படல்.

ஊடகத்தின் சேவையை சிவில் சமூகம் அந்த நாட்டு அரசாங்கங்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொண்டு அதற்கான ஆதரவினை வழங்குதல்.

ஊடகவியலாளர்களின் வன்முறைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை இயற்றல்.

சர்வாதிகார நாடுகளில் பத்திரிகை சுதந்திரம் பற்றிக் கூறுவதானால் பத்திரிகை சுதந்திரம் என்பதனை உதட்டினால் மட்டும் கூறிக்கொண்டு உள்ளதனால் ஒரு நாட்டின் தலைவரும், அமைச்சர்களும் அவர்களது அபிவிருத்தி செயற்பாடுகளை புகழ்ந்து பாடுவதுதான் பத்திரிகை என்று நினைக்கின்றார்கள். பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிராக செயற்படுகின்ற நாடுகளை சர்வாதிகார நாடுகள் என்று கூறலாம். ஜனநாயக நாடுகள் எனும் பெயரில் இருந்துகொண்டு சர்வாதிகாரத்தினை ஊடகத்துறையின் மீது செலுத்துகின்றமையினையும் நாம் காணலாம். நடுநிலையான கருத்துக்களையும், ஒரு நாட்டில் வாழும் இன்னுமொரு இனம்பட்ட அவலங்களையும், அவ்வினம் சார்ந்த பத்திரிகையாளர்கள் வெளிக்கொண்டு வரும் போது அதனை தடுப்பது பத்திரிகை சுதந்திரம் அல்ல.

பத்திரிகைகள் மீதான கட்டப்பாடுகள் அடக்கு முறைகள் அரசாங்கத்தினதும், ஆட்சியாளர்களினதும் வெறுப்புணர்வையே காட்டுகின்றன. இது ஜனநாயகத்தின் மீதான அச்சுறுத்தலின் வெளிப்பாடே ஆகும். ஊடகங்கள் அரசாங்கத்திற்கெதிரான செயற்பாட்டினை கொண்டவையல்ல. பத்திரிகை சுதந்திரம் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். ஜனநாயக நெறிமுறையினை மீறும் போதும், பொது மக்களினுடைய நன்மைகளுக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போதும், அவற்றைச் சுட்டிக்காட்டி நேர்வழியில் அரசாங்கங்களைப் பயணிக்க செய்யும் பாரிய பொறுப்பையே ஊடகங்கள் கொண்டிருக்கின்றன. இதனால்தான் பத்திரிகைகள் காவல் தூண்கள் என வர்ணிக்கப்படுகின்றன. அந்தவகையில் நல்லாட்சி வளர்வதற்கும், நல்லாட்சி தொடர்வதற்கும் பத்திரிகைகள் உறுதுணையாக அமைகின்றன.

உலகத்தில் பத்திரிகை சுதந்திர தரவரிசை பட்டியலில் 180 நாடுகள் உள்ளடக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் பத்திரிகை சுதந்திர குறிகாட்டி

☞11



## ஜனநாயகத்தின்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வரிசை பட்டியல் வெளியிடப்படும். அந்த வகையில் கடந்த வருடம் (2021) உலக ஊடக சுதந்திர குறிகாட்டி பட்டியலில் முதல் மூன்று இடங்களில் முறையே நோர்வே, பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் இடம்பிடித்திருக்கின்றன. அதே போன்று இறுதி மூன்று இடங்களில் முறையே துர்க்மெனிஸ்தான், வட கொரியா, எரித்திரியா போன்ற நாடுகள் காணப்படுகின்றது. எமது இலங்கை நாட்டின் ஊடக சுதந்திர நிலை பற்றி பார்க்கும் போது 2021 ஊடக சுதந்திர குறிகாட்டி பட்டியலில் 127ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. எமது நாட்டில் பத்திரிகை சுதந்திரத்தில் 2015 ஆம் ஆண்டு 165 வது இடத்தினையும், 2016, 2017 ஆம் ஆண்டுகளில் 141 வது இடத்தினையும், 2018 ஆம் ஆண்டு 131 வது இடத்தினையும், 2019 ஆம் ஆண்டு 126 வது இடத்தினையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் 2020 மற்றும் 2021 வருடம் ஒரு படி பின் நோக்கி 127 வது இடத்தில் காணப்படுகின்றது.

1973 ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை பேரவை ஆரம்பிக்கப்பட்டது. அது மட்டுமல்லாது பத்திரிகை பதிவு செய்தல் முக்கிய விடயமாக அமைந்ததோடு பத்திரிகைகளின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகை சுதந்திரம் என்பது ஊடகங்களுக்கு மிரட்டலும், தணிக்கையும் இல்லாமல் தகவலை வெளியிடுவதற்கான சுதந்திரமாகும். பத்திரிகை ஊடகம் சமூகத்தின் முக்கிய அங்கமாக கருதப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரமாக செய்திகள் சேகரிப்பதற்கும் சம்பவ இடங்களுக்குச் சென்று உண்மை நிலவரத்தை ஆய்வு செய்யவும் பாதிக்கப்பட்ட மக்களுக்களிடம் உண்மைகளைக் கண்டறியக் கூடிய ஒரு சூழல் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகளின் செய்திகளின் உண்மைத் தன்மை அதிகமாகப் பேணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் என்பது பக்கச்சார்பின்றிய தன்மையில் காணப்படுகின்றமை முக்கியமான அம்சமாகும். இலங்கையில் அத்துடன் ஆரம்ப காலங்களில் எமது நாட்டில் பத்திரிகை துறையினர் மீது கொலை மிரட்டல், கடத்தல் நிகழ்வுகள் அரங்கேறியிருக்கின்றன. ஆனால் தற்போது பத்திரிகையாளர்களுக்கு தனியான இடம் வழங்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

எனவே ஜனநாயகத்தின் பண்பு நிலைப்பாட்டில் உணர்ந்த முக்கியமான அந்தஸ்தை பெற்றுள்ள ஊடகமான பத்திரிகைகள் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தினையும் போற்றி புகழ வேண்டும் என்பது தவறு. அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சரியானவை என்று மக்களிடம் கொண்டு சேர்க்கும் கருவியாக பத்திரிகைகள் செயற்பட முடியாது. ஜனநாயகத்தையும் ஜனநாயக உரிமைகளையும் பேணிபாதுகாக்கின்ற பணியில் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாதது. ஆட்சியாளர்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி, ஜனநாயக செந்நெறிகளில் இருந்து நெறிபுரள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிமாகவே இருக்கின்றன. ஜனநாயக இலக்கில் இருந்து வழிதவறி செல்வதற்கு அதிகார அந்தஸ்து, புகழ், பிரபல்யம், செல்வம் என்பன ஊன்றுகோலாக அமைகின்றன. இவற்றின் ஆதிக்கத்தில் இருந்து தப்பி செயற்படுவதற்கு உண்மையயான ஜனநாயக தன்மை கொண்ட ஊடக செயற்பாடுகள் உறுதுணையாக இருக்கின்றன.

ஆகவே பத்திரிகை ஊடகமானது அரசிற்கும், ஆட்சியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் வழிநடத்தல் காவலர்களாக திகழ்கின்றது. இத்தகைய முக்கியத்துவம் மிக்க பத்திரிகை சுதந்திரமாக செயற்பட விடவேண்டியதும், அந்த சுதந்திரத்தினை பாதுகாத்து பேணுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்பில் இருந்து அரசாங்கம் தவறுமானால் அந்த ஆட்சி நல்லாட்சியாக அமைய முடியாது. அதுமட்டுமல்ல அந்த ஆட்சி உண்மையான ஜனநாயக ஆட்சியாகவும் இருக்க முடியாது.

## மஹிந்தர் துரத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மற்றைய கட்சிகளை நான் பெரிதும் விமர்சிப்பதுகிடையாது. ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொறுத்தவரை மஹிந்த ராஜபக்ஷ துரத்தப்பட போகிறார் எனத் தெரியவந்த பின்னரே அரசாங்கத்தில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு கொல்லப்பட்ட போது அமைச்சுப் பதவிக்காக ஒட்டிக்கொண்டிருந்தவர்களே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். மஹிந்த ராஜபக்ஷ பலமாக இருந்திருந்தால் ஜீவன் தொண்டமானின் வாயிலிருந்து அந்த வார்த்தை வந்திருக்குமா என்பது தொடர்பில் எனக்கு பாரிய சந்தேகம் உள்ளது. அது அவர்களது அரசியல். அதிகாரத்துக்கு பின்னாலும் சலுகைக்குப் பின்னாலும் செல்வது சிலருக்கு வாடிக்கையாகிப் போய்விட்டது. மனோ கணேசன் இந்த விடயத்திலே மிகவும் பொறுப்பானவராக ஒரு கொள்கைப் பிடிப்போடு இருப்பவர். அதிகாரத்துக்கு பின்னாலோ அமைச்சுப் பதவிக்கு பின்னாலோ சலுகைக்காகவோ சென்றவர் அல்லர். இந்த விடயத்திலே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாட்டோடு பயணிக்க கூடிய ஒருவராக அவரை நாங்கள் அறிகிறோம். ஒருசிலர் அங்கேயும் இங்கேயுமாக இருக்கிறார்கள். இது பாரிய நுணுக்கமான கலை. – என்றார்.

---

## அரசியல் தொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதாக சுமந்திரன் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைப் போல் வாயில் அரசியல் பேசுபவர்கள் நாங்கள் கிடையாது.

யாழ்.பொது நூலகத்தை எரித்த ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஆட்சியை அமைக்க ஆதரவு வழங்க முடியும் என்றால், அதைவிட அரசாங்கத்திலிருந்து நாங்கள் வெளியேறுவது அருமை பெரிய விடயமாக அமையாது.

ஜீவன் தொண்டமானை மக்கள் நாடாளுமன்றம் அனுப்பியமை மக்களுக்கு வேலை செய்வதற்கே தவிர அரசாங்கத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பதற்கு அல்ல.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருடகாலம் இணைந்து பணியாற்றியுள்ளோம். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சியுடன் 20 வருடங்கள் பணியாற்றியுள்ளோம்.

எமது கொள்கை மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதே தவிர ஆட்சியாளர்கள் யார் என்பதைக் கருத்தில் எடுப்பதில்லை.

அந்த வகையில் பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து நமது மக்களுக்கு தொடர்ந்தும் பணியாற்ற முடியாத சூழ்நிலையில் நேரடியாக பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் அரசாங்கத்திலிருந்து வெளியேறினோம்.

சுமந்திரனுக்கு நான் பகிரங்கமாக சவால் விடுகிறேன். நீங்கள் உங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையை நான் மாகாணசபை அமைச்சராக இருந்து ஆற்றிய சேவையுடன் முடிந்தால் ஒப்பிட்டு பார்க்க வாருங்கள்.

பன்னிரண்டு வருட காலமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை பற்றி பேசுகிறீர்கள். அதனை நிறைவேற்ற முடியவில்லை.

சிறையில் அரசியல் கைதிகள் வாழ்கின்றார்கள். அவர்களை கூட கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் விடுவிக்க முடியவில்லை.

இரவில் பிரதமரையும் ஜனாதிபதியும் சந்திக்கும் சிலரால் மக்களின் தேவைகளை பற்றி பேச முடியாமை கவலை அளிக்கிறது.

நான் மாகாண சபை அமைச்சராக இருந்தபோது பதுளை மாவட்டத்தில் 150 பாடசாலைகளுக்கு தமிழில் பெயர் வைத்தேன் 120 பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்களை அமைத்து கொடுத்தேன். 200 மேற்பட்ட வீதிகளை அமைத்துக் கொடுத்தேன்.

அதுமட்டுமல்லாது ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர் நியமனங்களை பெற்றுக் கொடுத்தேன் இவ்வாறு பலதரப்பட்ட வழங்கலை மக்களுக்காக பெற்றுக் கொடுத்தேன்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு எவ்வித அருகதையும் இல்லாத நிலையில் எம்மை மீண்டும் சீண்டினால் பதில் கூற முடியாத கேள்விகளை சுமந்திரனிடம் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

---

## மஹிந்த ராஜினாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றம் அடுத்த (இந்த) வாரம் கூடும் போது அங்கு விசேட உரை ஒன்றை நிகழ்த்திய பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகவுள்ளார் என்று வெளியாகும் செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும் என பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகவுள்ளார் என பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில் தற்போது இவ்வாறானதொரு வதந்தியும் பரப்பப்படுகின்றது. இது முற்றிலும் பிழையான தகவலாகும். இவ்வாறான வதந்திகளைப் பரப்புவோர் தயவு செய்து முதலில் செய்தியைச் சரி பார்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனவும் கீதநாத் காசிலிங்கம் மேலும் கூறியுள்ளார்.

---

## காலிமுகத் திடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கூடாரங்களை நேற்றைய தினம் அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு பொலிஸார் முயற்சித்தமையை அடுத்து அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதன்போது பெருமளவான கலகம் அடக்கும் பொலிஸாரும் அங்கு திடீரென குவிக்கப்பட்டனர். கூடாரங்களை அகற்றுவதற்கு பொலிஸார் தொடர்ந்தும் முயற்சித்த போதிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் அதற்கு இடமளிக்கவில்லை. பொலிஸாரின் இந்த செயற்பாட்டினால் குறித்த பகுதியில் அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது.

எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரின் கடுமையான எதிர்ப்பையடுத்து பொலிஸார் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளால் தாம் அஞ்சப் போவதில்லை என்றும் துப்பாக்கிச்சூட்டை எதிர்கொள்ளவும் தயாராகவே இருக்கின்றார்கல் என்றும் ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டிருந்தவர்கள்தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் இன்று 25 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

---

## தேசிய ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே அனைவரும் இணைந்து தேசிய ஒருமித்த அரசாங்கத்தை அமைப்பதற்கான கருத்தியல் உடன்படிக்கைக்கு வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜி.எல்.பீரிஸ், சாகர காரியவசம், சஞ்சீவ எதிரிமான்ன, பஸில் ராஜபக்ஷ மற்றும் ரமேஸ் பத்திரண ஆகியோரும் –

சுயாதீன உறுப்பினர்கள் அணியிலிருந்து நிமல் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ன யாப்பா, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் டிரான் அலஸ் உள்ளிட்டோரும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா உறுதிப்படுத்தினார் எனவும் செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்பட்டுவரும் 11 கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, டிரான் அலஸ் என ஐவர் கொண்ட குழுவே இதற்காக நியமிக்கப்பட்டிருந்தது.

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஐவர் கொண்ட குழுவினர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும், ஜனாதிபதியுடன் தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், ஜனாதிபதி இணங்கினால் அமைக்கப்படவுள்ள இடைக்கால அரசாங்கத்துக்கு 'தேசிய ஒருமித்த அரசாங்கம்' எனப் பெயரிடப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## இந்த அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நுகேகொடையில் நடைபெற்ற சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

சில காய்கள் காணாமல் போயிருந்தாலும் ராஜா, ராணி, குதிரை மற்றும் மந்திரி ஆகியோர் இன்னும் எங்கள் பக்கம் இருப்பதால் சிறீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்று வருகின்றது.

தற்போதைய முகாமில் எங்களுக்கு மிகப்பெரிய பிடி உள்ளது. அதேபோல் நாடாளுமன்றத்திலும் பெரமுனவுக்கும் அரசாங்கத்திற்கும் மிகப்பெரிய அதிகாரம் உள்ளது. வீட்டுக்குப் போகக் கூடாது என்பதற்காகவே நாங்கள் ஆட்சி அமைத்தோம். இந்த அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. ஆட்சி முறையைச் சீர்திருத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். நாம் பொருளாதார சீர்திருத்தங்களை நோக்கி நகர்கின்றோம். அதில் எந்தக் கேள்வியும் இல்லை. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அதற்காக அர்ப்பணிப்புடன் உள்ளனர். முன்னைய தலைவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போது 12ஆயிரம் பில்லியன் நேரடியாகக் கடன் வாங்கப்பட்டிருந்தது. அதையும் நாம் செலுத்த வேண்டும்.

நான் அரசு அதிகாரிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் என்பதால் அதிகாரிகளிடம் எதுவும் கூறுவதில்லை. ஆனால் வேலை செய்யும் போது யாரையும் தடுக்காதீர்கள். இதை சஜித்தின் கைப்பாவைகளிடம் கூறுகின்றேன். – என்றார்.

---

## நாணய நிதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய பொருளாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இலங்கைக்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் கடனை மறுசீரமைப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான இலங்கையின் முடிவை சீனா தெளிவாக ஆதரிக்கின்றது என்றும் சீனத் தூதுவர் இங்கு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பாரிய பங்குதாரர் என்ற வகையில் இலங்கையின் நிலைப்பாட்டை சாதகமாக பரிசீலித்து கூடிய விரைவில் உடன்பாட்டை எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை ஊக்குவிப்பதில் சீனா செயலூக்கமான பங்கை வகிப்பதற்கு தயாராக உள்ளது எனவும் அமைச்சர் அலி சப்ரிக்கு சீனத் தூதுவர் உறுதியளித்தார்.

இருதரப்புக் கடனை மறுசீரமைப்பதற்கான இலங்கையின் கோரிக்கைக்கு அமைவாக முதிர்ச்சியடைந்த கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொடர்புடைய நிதி நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுடனான கலந்துரையாடல்களை சீனா தீவிரமாக ஆதரிக்கும் என்றும் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கை பிரதமருக்கும் சீனப் பிரதமருக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடல் தொடர்பிலும் சீனத்தூதுவர் இங்கு கலந்துரையாடினார்.